# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 22.10.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் அதிகாரம் ஆலி இம்ரானின் 105 வது வசனத்தையும், அதிகாரம் அத்தவ்பாவின் 122 வது வசனத்தையும் ஓதினார்கள்:**

**பொருள்: (மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)**

**நம்பிக்கை கொண்டவர்களெல்லாரும் (ஒன்று திரண்டு) புறப்படுவது அவர்களால் முடியாததாகும். அவர்களின் ஜமாஅத்திலிருந்து ஒரு சாரார், மார்க்கத்தை முழுமையாகக் கற்கவும் அவர்களிடம் திரும்பி வந்து (மார்க்கத்தைச் சரிவர பேணாதிருப்பது குறித்து) அவர்களை எச்சரிக்கை செய்வதற்கும் அவர்கள் ஏன் புறப்பட்டிருக்கக் கூடாது? (9:122)**

இந்த வசனங்களில் மார்க்கத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணிப்பவர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர்; தீமையைத் தடுக்கின்றனர். இஸ்லாத்தை எடுத்துரைப்பதில் வாழ்வைக் கழிக்கின்றனர். அல்லாஹ்வின் அருளால் மார்க்கத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணிக்கும் திட்டம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்திலிருந்து ஏதாவது ஒரு வடிவில் இருந்து வருகிறது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய காலத்தில் அது இன்னும் முறைப்படுத்தப்பட்டது. முறைப்படி தமது வாழ்வை அர்ப்பணிப்பவர்களிடம் இருந்து ஒரு படிவம் நிரப்பி பெறப்பட்டது.

மார்க்க கல்விக்காக ஜாமிஆ அஹ்மதிய்யா மேலும் சீர்படுத்தப்பட்டது. நாட்டிற்கு வெளியிலும் முபல்லிக்மார்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் தப்லீக் மைதானத்தில் மிக நல்ல பணிகளைச் செய்துள்ளனர். அல்லாஹ்வின் அருளால் தப்லீக் வட்டத்தில் இறங்கினர். அது இன்று வரை தொடர்கிறது. முபல்லிக்குகளும் இந்த பணியில் இறங்கினர். பாகிஸ்தான், இந்தியா மட்டும் அல்லாமல் மற்ற நாடுகளைச் சார்ந்தவர்களும் கூட இப்போது முபல்லிக்குகள் மற்றும் முஅல்லிம்களின் வட்டத்தில் இணைந்துள்ளனர். குறிப்பாக ஆப்பிரிக்காவில் கணிசமானோர் முபல்லிக், முஅல்லிம்களாக உள்ளனர். அதுபோன்று இந்தோனேஷியாவிலும் உள்ளனர். அல்லாஹ் விசுவாசத்துடன் இவ்வனைவரையும் பணி செய்ய வைப்பானாக.

வாழ்வை அர்ப்பணித்தவர்களுள் மருத்துவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற துறையைச் சார்ந்தவர்களும் உள்ளனர். முபல்லிக்குகள் மட்டும்தான் என்றில்லை. ஜமாஅத்தின் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க தப்லீக் களமும் விரிவாகி உள்ளது. ஜமாஅத்தின் முபல்லிக்குகள், வாழ்வை அர்ப்பணித்தவர்களின் தேவை ஏற்படும் இடங்களில் மேற்கண்ட துறையைச் சார்ந்தவர்களின் தேவைகளும் உருவாகின்றன.

இவ்வாறு பணிகள் அதிகரித்து விரிவுபடுத்தப்படுகின்றது. அஹ்மதிய்யத்தின் செய்தியும் பரவுகிறது. உலகம் அஹ்மதிய்யத்தின் மடியில் வந்து கொண்டும் இருக்கிறது. அத்துடன் மார்க்கத்தை அர்ப்பணிப்போர் மற்றும் மார்க்க அறிவு கொண்டோரின் தேவையும் அதிகரித்துள்ளது. அல்லது தப்லீக், தர்பிய்யத்தின் பணிகளை இதன் மூலமே செய்ய முடிகிறது. நான் கூறிய வசனங்களிலிருந்து தெரிவது போன்று ஜமாஅத்தில் உள்ள அனைவரும் தப்லீக், தர்பிய்யத் பணிகளில் ஒன்றுபோல் இறங்குவதும் சாத்தியமில்லை. எனவே இவற்றை சிறப்பான முறையில் செய்யக் கூடிய ஒரு கூட்டம் இருக்க வேண்டும்.

இந்தப் பணியை உம்மத்தின் ஒவ்வொரு தனி நபரும் செய்ய வேண்டிய பொறுப்பு இருந்த போதிலும், அவர்கள் நன்மைகளைப் பரப்பவும், தீமைகளைத் தடுக்கவும், அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைச் செய்ய வேண்டியதிருந்த போதிலும் அல்லாஹ் இவ்வாறும் கூறியுள்ளான். உலகத்தை நடத்திக்

கொண்டு செல்வதும் முக்கியமானதாகும். எனவே எவர் அதில் ஈடுபட்டிருக்கிறாரோ அவர் அதே நேரத்தை இங்கும் தர முடியாது. பிறகு ஒவ்வொருவரின் தகுதியும் கூட தப்லீக், தர்பிய்யத் பணியை மிகச் சரியாக செய்யத்தக்க முறையில் இருப்பதில்லை. பிறகு இந்த உம்மத்தில் உள்ள ஒவ்வொரு தனி நபரும் முபல்லிக், முஅல்லிம்களுக்கு இருப்பது போன்று, மார்க்கத்தைப் புரியும் திறன் பெற்றிருப்பது சாத்தியமில்லை.

மேலும் மக்கள் அனைவருக்கும் சிறப்பான பயிற்சி அளித்திடவும் இயலாது. எனவே ஒரு கூட்டம் இருக்க வேண்டும். அது முழுமையாக மார்க்கத்தைக் கற்க வேண்டும். இறை கட்டளைகள், ஏவல், விலக்கல்களைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். அதனை ஆழமாகக் கற்க வேண்டும்; பரப்பவும் வேண்டும். மாஷா அல்லாஹ். ஜமாஅத்தில் அவ்வாறு பலர் இருக்கின்றனர். அவர்கள் ஆர்வத்துடனும் ரசணையுடனும் உலக அறிவுடன் மார்க்க அறிவைப் பெற்றுள்ளனர். ஆனால் சில வேளைகளில் அவர்களுக்கும் பணியின் பளுவின் காரணமாக மார்க்கத்திற்காக நேரத்தை செலவழிக்க இயவில்லை. எனவே அல்லாஹ் கூறுகிறான்: மார்க்கப் பணிகளுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள ஒரு கூட்டம் இருக்க வேண்டும். இஸ்லாம் ஒரு உலகளாவிய மார்க்கமாக இருப்பதால் ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு சுற்றிலும் பல்வேறு தரப்பட்ட மக்களைக் கொண்ட ஒரு கூட்டம் மார்க்கப் பணிக்காக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு கூட்டம் மார்க்கத்தைக் கற்று அதனை பிறருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு கூட்டத்தின், ஒவ்வொரு பிரிவின், ஒவ்வொரு வட்டத்தின் இயல்பும், தகுதியும் வேறுபட்டதாகும். எனவே அதற்கேற்ப தப்லீகின் நடைமுறையும் வித்தியாசமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் தப்லீகும் தர்பிய்யத்தும் எளிதாக அமையும். இவ்வாறு இந்த வழிகாட்டலை அல்லாஹ்வே வழங்கினான்.

முஃமின்களில் ஒரு கூட்டம் தப்லீக், தர்பிய்யத் பணிகளைச் செய்ய வேண்டும். மேலும் இக்கூட்டம் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு வட்டத்திலும் இருக்க வேண்டும். அதன் மூலமே இப்பணி எளிதாகும்.

இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத் இப்பணியை எளிமைப்படுத்தும் ரீதியில் ஒரு அமைப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த அமைப்பில் பங்குகொள்பவர்களாக இருக்கின்றனர். அவ்வாறு உருவாகிக் கொண்டும் இருக்கின்றனர். நான் கூறியது போன்று ஜமாஅத்தின் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க இம்மக்களின் எண்ணிக்கையும் அவசியமாகும். இந்த தேவை வருங்காலத்தில் அதிகரிக்கவும் செய்யும். இப்போதைக்கு அந்த தேவையில்லை. ஆனால் வருங்காலத்த்தில் இந்த தேவை அதிகரிக்கவிருக்கிறது.

எனவே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த தேவையை உணர்ந்து அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டலைப் பெற்று ஜமாஅத்திற்காக வாழ்வை அர்ப்பணிக்கும் திட்டத்தை உருவாக்கினார்கள். அதன் அடிக்கல்லை தக்வாவாக ஆக்கியவாறு பெற்றோர்களிடம் தமது குழந்தைகளை பெரியவர்களாக்கி அவர்களை ஜமாஅத்திற்கு வழங்க வேண்டும் என்றும் பெற்றோர்கள் தமது குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே மார்க்கத்தின் வழியில் அர்ப்பணிப்பதற்காக குழந்தைகளை ஜமாஅத்திற்கு வழங்கிவிட வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களுடைய தாயாரைப் போன்று, என் இறைவா! என் வயிற்றில் உள்ளதை உனக்காக (உன் பணிக்காக) அர்ப்பணிக்க நான் நேர்ந்துள்ளேன். (3:36). எனது இறைவன் எனது வயிற்றில் உள்ளதை உனக்கு அர்ப்பணிப்பதற்காக நான் அதனை சுதந்திரமாக விட்டுவிட்டேன். என்னிடமிருந்து இதனை ஏற்றுக் கொள்வாயாக! இந்த துஆவுடன் தாய்மார்கள் தமது குழந்தைகளை ஜமாஅத்திடம் வழங்கும் போது – காலத்தின் இமாமிடம் ஒப்படைக்கும் போது அவர்களுக்கு பெரும் பொறுப்பு வந்து விடுகிறது. அந்த குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்கி இறைவழியில் அவர்கள் தமது வாழ்வை அர்ப்பணிக்க தகுதியுள்ளவர்களாக வாழ்வதற்குரிய தரத்துடன் ஜமாஅத்திடம் தம்மை வழங்க வேண்டும். அவர்களின் அமல் முழுவதும் மார்க்க சேவை செய்பவர்களாக இருக்கும் வண்ணம் அல்லாஹ்வே இவர்களை ஆக்குவாயாக! உலக ஆசைகளிலிருந்து இவர்களை தூய்மையாக்குவாயாக! உலகின் பக்கம் அவர்களுக்கு ஈர்ப்பு இருக்கக் கூடாது. மாறாக மார்க்கத்திற்காக இவர்கள் களங்கமற்றவர்களாக தம்மை ஒப்படைக்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும்.

பிறந்ததிலிருந்து அவர்களுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும். நான் மார்க்கத்தை அர்ப்பணித்தவன். நான் உலக அழுக்குகளில் விழுவதற்கு பதில் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதில் வாழ்கை கழிக்க வேண்டும் என்று உணரும் விதத்தில் தர்பிய்யத் வழங்க வேண்டும். இவ்வாறு ஆரம்பத்திலேயே தர்பிய்யத் வழங்கும் போது வாலிப வயதை அடையும் போது அந்தப் பையன் தானே தனது வாழ்வை அர்ப்பணித்து விடுவான்; முயற்சி செய்வான். பெற்றோர் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். குழந்தைகளை வக்ஃப் செய்வதற்காக தயார் செய்வது, அவர்களுடைய தஃலீம், தர்பிய்யத்தில் கவனம் செலுத்துவது ஆகியவை பெற்றோரின் கடமையாகும். அதன் மூலமே அழகிய பழம் தரும் செடியாக ஜமாஅத்தில் தம் குழந்தையை காலத்தின் கலீஃபாவிடம் மார்க்கப் பணிக்காக ஒப்படைக்க முடியும். நமது பையன் வக்ஃபே நவ் (சிறுவனாக) உள்ளான். எனவே பிறப்பிலிருந்தே ஜமாஅத் அவனுக்கான எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறான சிந்தனையாகும்.

ஜமாஅத் தஃலீம், தர்பிய்யத்திற்காக கண்டிப்பாக வழிகாட்டல்களை வழங்குகிறது; வழங்கவும் வேண்டும். அதற்காக தலைமையகமாகிய ரப்வாவில் வகாலத்தே வக்ஃபே நவ் என்ற பிரிவும் உள்ளது. காதியானில் கல்விப் பிரிவின் கீழ் வக்ஃபே நவ் பிரிவு உள்ளது. இலண்டனில் தலைமையகம் என்ற முறையில் காலத்தின் கலீஃபாவின் காண்காணிப்பில் இந்தப் பிரிவு செயல்படுகின்றது.

ஜமாஅத்தில் வக்ஃபே நவ் செயலர்கள் இதன் பொறுப்பாளிகளாக உள்ளனர். குழந்தைகளின் தஃலீம், தர்பிய்யத், தேவையான அறிவுரை மற்றும் வழிகாட்டுதலை வழங்குதல் போன்றவைகளை செய்து அவர்களை ஜமாஅத்தின் செயல்திறனுள்ள அங்கமாக மாற்றுங்கள். இதில் நீங்கள் நல்ல செயல்திறன் உள்ளவராக இருங்கள். ஆனால் இவையெல்லாம் இருந்தாலும் பெற்றோருக்கு பெரும் பொறுப்பு உள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று ஜமாஅத்தில் அதிகரித்துள்ள பொறுப்புகளை கவனத்தில் கொண்டுதான் வக்ஃபே நவ் திட்டம் தொடங்கப்பட்டது. இது மிக முக்கியமான வருங்காலத்தில் ஜமாஅத்தின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய திட்டமாகும். இதில் முபல்லிக்குகள், கொள்கைப் பரப்புநர் அல்லாமல் இன்னும் பல்வேறு துறையினரின் தேவை உள்ளது. எனவே பெற்றோர் வக்ஃபே நவ் திட்டத்தின் இந்த பொறுப்பை விளங்கியவாறு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். பெரும்பாலான இடங்களில் வக்ஃபே நவ் செயலர்கள் எந்த அளவுக்கு செயல்திறனுள்ளவர்களாக இருக்கின்றார்கள்; எந்த அளவுக்கு செயல்திறன் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்றும் பார்க்க முடிகிறது.

எனவே குழந்தைகள் செயல்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள களத்தில் இறங்கும் போது தமக்கு முன் இருக்கும் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்ற முக்கிய பங்காற்ற வேண்டும். வெற்றி பெறுபவர்களின் கூட்டத்தில் தாமும் இணைய வேண்டும். தாம் மட்டும் வெற்றி பெறுபவரானால் போதுமானது அல்ல. இவ்வுலகத்தின் வெற்றிக்கும் நாம் காரணமாக இருக்க வேண்டும்.

நிச்சயமாக ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும். எந்தவோர் அஹ்மதி குழந்தையும் வீணாவதை ஜமாஅத் சகித்துக் கொள்ள முடியாது. இவர்கள் அனைவரும் ஜமாஅத்தின் அமானிதங்கள் ஆவர். ஆனால் மார்க்கத்திற்காக அர்ப்பணித்த குழந்தைகளின் உள்ளத்தில் சிறு வயதிலேயே இதனை உருவாக்க வேண்டும். நீங்கள் அல்லாஹ்வின் வழியில் (உங்களை) அர்ப்பணித்துள்ளீர்கள். வெறுமனே வக்ஃபே நவ் என்ற பெயரைப் பெறுவது போதுமானதன்று. மாறாக உங்கள் தர்பிய்யத், உங்கள் தஃலீம் உங்களது எழுதல், அமர்தல், உங்களது பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் அனைத்தும் மற்றவரை (உங்கள் பக்கம்) ஈர்க்க வேண்டும். மேலும் வயது அதிகமாக அதிகமாக உங்களது இந்த செயல்பாடுகள் உறுதியாக வேண்டும். உங்களின் நடைமுறையில் எவரும் விரலை உயர்த்தக் கூடாது. பிறகு வக்ஃபே நவ் பாடத்திட்டத்தை ஜமாஅத் உருவாக்கியுள்ளது. அதனை அவர்களுக்கு கவனமூட்டி கற்றுக் கொடுக்க வேண்டும். இது, பெற்றோர் மற்றும் ஜமாஅத் அமைப்பு ஆகிய இருவரின் பணியாகும். அதன் மூலம் மார்க்கத்தின் புரியும் திறனைப் பெறுவதில் இளமைப் பருவம் முதலே கவனம் ஏற்பட வேண்டும். இதன் மூலம், வரக்கூடிய ஒவ்வொரு நாளிலும் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இதன் மூலமே நாம்

வருங்காலத்தின் சவால்களை சந்திக்க முடியும். இதன் மூலமே உலகிற்கு (உலக மக்களுக்கு) மார்க்கத்தை புரிய வைக்கும் பணியை உரிய நேரத்தில் செய்ய முடியும். பிறகு நினைவில் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே மார்க்கத்தை கற்றுக் கொடுப்பதில் ஈடுபாடு ஏற்பட வேண்டும். அப்போதுதான் சரியான புரியும்திறனை அவர்களால் பெறவும் முடியும். அதுவன்றி நிர்பந்தத்திற்காக கற்பது, நிர்பந்தத்திற்காக வக்ஃப் செய்வது பயனைத் தராது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மார்க்கத்தைப் பற்றி புரிந்து கொள்ளும் திறன் கொண்ட மக்கள் வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்த மார்க்கத்தை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் திறமை வேண்டும். எனவே நம்மிடமுள்ள வாழ்வை அர்ப்பணித்தவர்கள் மார்க்கத்தைக் கற்று தமது வாழ்வை மார்க்கத்திற்காக வக்ஃப் செய்ய விரும்புகின்றவர்கள் அல்லது நம்முடைய மார்க்கக் கல்லூரிகளில் படிப்பவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த மார்க்கத்தை கற்றுக் கொடுத்தார்களோ அதனை நீங்கள் கற்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த மார்க்கத்தை கற்றுக் கொடுத்தார்கள்? அவர்கள் நம் முன்னால் எந்த மார்க்கத்தை எடுத்து வைத்தார்கள்? எந்த முன்மாதிரியை எடுத்து வைத்தார்கள்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பு நமக்கு ஓர் வழிகாட்டியாக உள்ளது. **கான குலுகுஹுல் குர்ஆன்** – அன்னாரின் (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின்) நல்லொழுக்கம் குர்ஆன் ஆகவே இருந்தது. அன்னாரின் மார்க்கம் திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையையும் புரிந்து அமல் செய்தல், அதனை பரப்புதல் ஆக இருந்தது. எனவே அன்னாரது கட்டளையின்படி செயல்பட வேண்டும் என்பது பின்பற்றக்கூடியவர்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். எனவே எவர்கள் மார்க்கப் புரியும்திறன் கொண்டவாறு மார்க்கத்தை கற்பதாகவும், அதனை புரிவதாகவும் வாதிடுகிறார்களே, சாதாரண மக்களை விட அதிகமாக மக்களை நன்மையின் பக்கம் அழைக்கின்றார்களோ அவர்களிடம் தாம் ஏவுகின்ற நன்மை, தடுக்கின்ற தீமைகள் விஷயத்தில் நல்ல முன்மாதிரி எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஜமாஅத்திற்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். திருக்குர்ஆன் முழுமையாக்கப்பட்ட ஒரு ஷரீஅத் வேதம் என்பது உங்கள் வாதம் எனில், மார்க்கப் புரியும்திறன் கொண்டவர்கள் அந்த போதனைக்குள் தம்மை கொண்டுவர அனைவரையும் விட அதிக பொறுப்பாளி ஆவர். அதன் மூலமே உங்கள் பொறுப்புகளை சரியாக நீங்கள் நிறைவேற்ற முடியும்; உங்கள் சுய முன்மாதிரி மூலம் பிறரை அழைக்க முடியும். அழகிய முறையில் தப்லீக் தர்பிய்யத் பணியைச் செய்ய முடியும்.

**இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பத்தை எடுத்து வைக்கிறேன். அன்னார் என்ன விரும்புகிறார்கள்? எத்தகைய வாழ்வை அர்ப்பணித்தவர்கள் இங்கு தேவை? என்று அன்னார் கூறுகின்றார்கள்.**

எனக்கு எத்தகைய ஆள் தேவை என்றால், நாவோடு மட்டுமல்ல. மாறாக செயல்படுத்திக் காட்டுபவர்களாக இருக்க வேண்டும். வெறும் வாதம் எந்த வேலைக்கும் உதவாது.

எல்லா முபல்லிக்குகள், பல்வேறு ஜாமிஆ(அஹ்மதிய்யா)வில் படித்துக் கொண்டிருப்பவர்களிடம் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வழிகாட்டலைக் கவனத்தில் கொள்ளுங்கள். நமது இல்ம் மற்றும் அமல் (சொல், செயல்) இரண்டிற்கும் ஒரு ஒற்றுமை உள்ளதா? இல்லையா? என்று எப்போதும் உங்களை ஆய்வு செய்து கொண்டிருங்கள். தொழுகையில் சோம்பல் காட்டுவது பாவம் என்று பிரசங்கம் செய்கிறீர்கள். குறிப்பாக ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இன்னும் சிலர் களத்திற்கு வந்த பிறகும் சோம்பல் காட்டுகின்றனர். அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மற்றவர்களைப் பார்த்து கூறுகிறோம். திருமண வைபவங்களில் நடக்கும் தீய சடங்குகளை பித்அத்துகள் என்று கூறுகிறோம். (சோம்பல் காட்டுவதை) காலத்தின் கலீஃபா மற்றும் ஜமாஅத் அமைப்பும் அதற்கு அனுமதிக்காது; மார்க்கமும் அனுமதிக்காது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கடுமையாக இதனை மறுத்துள்ளார்கள். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் இவற்றை ரத்து செய்கின்றனர்.

ஆனால் இதனை எடுத்துக் கூறுபவர்கள் தமது உறவினர்கள், சந்ததிகளின் திருமண வைபவங்களில் தீய சடங்குகளை கவனத்தில் கொள்ளாமல் இருப்பது; அல்லது இதுபோன்று தீய சடங்குகளைச் செய்யும் திருமணங்களில் கலந்து கொள்வது; அவர்களிடம் புரிய வைக்காமலும், அதனை விட்டு எழுந்து வராமலும் இருப்பது ஆகியவை தவறாகும். எனவே மார்க்க அறிவைக் கற்கிறீர்கள். எனவே அதன்படி செயல்படக்கூடிய ஆலிம் ஆக இருங்கள்; அதற்காக முயற்சி செய்யுங்கள்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு வக்ஃபே ஸிந்தகி (வாழ்வை அர்ப்பணித்தவர்கள்) தற்பெருமையிலிருந்து முற்றிலும் தூய்மையாக இருக்க வேண்டும்.

வாழ்வை அர்ப்பணித்த ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். செயல் களத்தில் உள்ளவர்கள் பல்வேறு பகுதிகளில் வேலை செய்து கொண்டிருப்பவர்கள், ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படித்துக் கொண்டிருப்பவர்கள் ஆகியோரிடமும் இது சம்பந்தமாக சுய பரிசோதனை செய்யும் பழக்கம் உருவாகி விட்டால் பிறகு மாற்றங்கள் உருவாகும் இன்ஷா அல்லாஹ்.

இவ்வருடம் கனடாவில் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் முதல் குழு வெளி வருகிறது. இன்ஷா அல்லாஹ் மற்ற இடங்களிலும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள குழு வெளிவரத் தொடங்கும். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். எளிமை, பணிவு உங்களிடம் இருக்க வேண்டும். உங்கள் தகுதியை நிலைநிறுத்த வேண்டும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வாழ்வை அர்ப்பணித்தவர்கள் நமது நூல்களை அதிகமாக படிப்பது, தமது அறிவை முழுமைப்படுத்தக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிப்பது ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிக்கும் போதும், களத்தில் பணியாற்றும் போதும் மிக மிக அவசியமாகும். ஏனெனில் அதுவே இக்காலத்தில் சரியான இஸ்லாமிய போதனைகளை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஅல்லிம், கொள்கைப் பரப்புநர்களிடம் போதுமென்ற மனம் இருக்க வேண்டும்.

போதுமென்ற மனம் என்பதற்கு அன்னார் ஓர் அடையாளத்தை கூறியுள்ளார்கள். ஒருவரிடம் போதுமென்ற மனம் உருவாகாதவரை அவரிடம் மார்க்கத்தை எடுத்துச் சொல்லும் உரிமையை வழங்க இயலாது.

ஒருவரிடம் தன்னிறைவு உருவானால் மட்டுமே வக்ஃபே ஸிந்தகியின் (மார்க்கத்திற்கான அர்ப்பணிப்புப் பணியை) வழங்க முடியும். இதன் காரணமாகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் சில வேளைகளில் பட்டினியால் மரத்தின் இலைகளை தின்று வாழ்வைக் கழிக்கும் நிலைக்கு உள்ளாகியிருந்தனர்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆக்களை ஏற்றுக் கொண்டவாறு அத்தகைய சான்றான்மையைக் கொண்ட முபல்லிக்குகளை வழங்குவானாக!

இன்று முபல்லிக்குகளுக்கு பல வசதிகளும் உள்ளன. ஆனால் ஒரு காலத்தில் இந்த அளவுக்கு வசதிகள் இருந்ததில்லை. ஜமாஅத்தின் பொருளாதார நிலையும் இப்போது நன்றாக உள்ளது. அல்லாஹ்வின் அருளால் முடிந்தவரை எல்லா சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ள முயற்சி செய்யப்படுகின்றது. சில வேளைகளில் இப்போதும் கஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் மார்க்கத்திற்காக தியாகம் செய்வதற்காக உங்களை நீங்களே முன் வைத்து விட்ட நிலையில் இந்த கஷ்டங்களுக்கு எல்லாம் எந்த முக்கியத்துவமும் இருக்காது. இருக்கவும் கூடாது. இன்று அல்லாஹ்வின் அருளால் ரப்வாவும் காதியானும் அல்லாமல் உலகின் பல நாடுகளில் – U.K., கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளிலும் ஜாமிஆக்கள் உள்ளன.

நான் ஏற்கனவே கூறியது போன்று இவ்வருடம் கனடா ஜாமிஆவின் முதல் முபல்லிக் குழு வெளி வருகிறது. இவர்கள் செயற்களத்திற்கு வரப்போகின்றார்கள். இன்ஷா அல்லாஹ். அதுபோன்று இந்தோனேஷியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் ஜாமிஆ அஹ்மதிய்யா உள்ளது. ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா போன்ற நாடுகளிலுள்ள ஜாமிஆக்களில் பயில்வோர் பொதுவாக அந்தந்த நாடுகளில் வசிப்போர் அங்கேயே பணியில் அமர்த்தப்படவும் செய்கின்றனர். தமது நாட்டு சூழ்நிலையில் வாழ்வைக் கழிப்பவர்களாகவே உள்ளனர். ஆனால் மேற்கத்திய நாடுகளில் பயின்று வெளிவரும் நமது மாணவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். வாழ்வை அர்ப்பணித்தவர் என்ற முறையில் உங்களை எங்கே அனுப்பினாலும் போக வேண்டும். இதுதான் வக்ஃபின் ரூஹ் ஆகும். உங்களை ஐரோப்பாவிலேயே பணியில் அமர்த்த வேண்டும் என்று எந்த கண்டிப்பும் இல்லை. இங்குள்ளவர்களை ஆப்பிரிக்காவிற்கு அனுப்பும்போது அங்குள்ள கடுமையான தட்பவெப்பத்தால் சிரமப்படலாம். ஆனால் அல்லாஹ்வுக்காக வக்ஃப் செய்த பிறகு அதற்காக தயாராகி விட வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று இப்போது நல்ல வசதிகள் உள்ளன. ஆரம்ப காலத்தில் செயற்களத்திற்கு வந்த முபல்லிக்குகள் பெரும் கஷ்டத்திற்கு ஆளானார்கள். முபல்லிக்குகளின் சில சம்பவங்களை நான் எடுத்துள்ளேன். அதனைக் கேட்கும் போது அவர்கள் எவ்வாறு தமது வாழ்வை கழித்தார்கள் என்று தெரிய வரும்.

நமது முபல்லிக் செய்யது ஷா முஹம்மது சாஹிப். இவர் தனது சம்பவத்தை எழுதுகிறார்.

நான் தொடர்ந்து 18 ஆண்டுகள் இந்தோனேஷியாவில் பணியாற்றினேன். அல்லாஹ்வின் அருளால் நான் ஒருபோதும் யாரிடமும் கையேந்தியதில்லை. சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். மற்றவர்கள் மிகவும் சிரமத்துடன் உண்ணக்கூடிய வருமானமாக அது இருக்கலாம். நான் எனது ஒவ்வொரு தேவைக்காகவும் எனது ரப்பின் கதவை தட்டி வந்தேன். அவனே எனது தேவைகளை நிறைவேற்றி வந்தான். 18 வருடத்திறகுப் பிறகு நான் ஊர் திரும்பிய போது மிகவும் மகிழ்ச்சியுடன் கப்பலில் பாகிஸ்தான் திரும்பினேன். என்னிடம் சலவை செய்த இரண்டு சல்வார்கமீஸ் தவிர வேறு எதுவும் இல்லை. கப்பலில் வந்து கொண்டிருந்த போது ஆகாயக் கப்பலைப் பற்றி அப்போது நினைத்துக் கூட பார்க்க இயலாது. கடல் மார்க்கமாக கப்பலில் வந்து கொண்டிருந்த போது நினைவு வந்தது. நான் இவ்வளவு காலத்திற்குப் பிறகு ஊர் திரும்புகிறேன். என்னிடம் புதிய துணிகள் கூட இல்லை. இருந்தால் கூட ஒரு புது ஆடையை அணிந்து கொண்டு ரப்வா இரயில்வே நிலையத்தில் போய் இறங்கியிருப்பேன். அப்போது முபல்லிக்குகள் கராச்சி வந்து, அங்கிருந்து இரயில் மூலம் ரப்வா போய் சேருவார்கள். நான் துஆ செய்து கொண்டிருந்தேன். இறைவா! இப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் எனது உள்ளத்தில் வந்திருக்கக் கூடாதே. இது வக்ஃபின் உயிருக்கு எதிரானதே. இவ்வாறு நினைத்தவாறு பாவமன்னிப்புத் தேடினேன். சில நாட்கள் கழித்து கப்பல் சிங்கப்பூரில் வந்து நின்றது. நான் கப்பலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு மனிதர் ஏணி மூலம் கப்பலில் ஏறிக் கொண்டிருந்தார். அங்கிருந்தவர்களிடம் ஏதோ விசாரித்தார். அம்மனிதர், (அவரை) என்னை நோக்கி அனுப்பினார். அவர் என்னிடம் வந்தார். நான் அஹ்மதியாவேன். நீங்கள் ஊருக்குப் போவதாகவும், வழியில் சிங்கப்பூரில் கப்பல் நிற்கும் என்பதையும் அல்ஃபஸ்ல் இதழில் படித்தேன். உங்களை சந்தித்து ஏதாவது அன்பளிப்பு வழங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. உங்கள் போட்டோவைப் பார்த்துள்ளேன். எனவே தோராயமாக கணித்து உங்களுக்காக இரு ஆடைகளும் தலைப்பாகையும் தயார் செய்துள்ளேன். இதனை உங்களிடம் வழங்குகிறேன். நீங்கள் இதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனைக் கேட்டு விட்டு எனது கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. எவ்வாறு இறைவன் எனது ஆசையை நிறைவேற்றுவதற்காக ஓர் அஹ்மதியின் உள்ளத்தில் தூண்டுதலை ஏற்படுத்தியுள்ளான். அதுவும் அந்த அஹ்மதியை எனக்கு தெரியாது; என்னை அவருக்கு தெரியாது.

முபல்லிக்குகளுக்கு போதனை செய்தவாறு கூறுகிறார்: முபல்லிக்குகள் இறை சன்னிதானத்தில் குனிந்து இருப்பார்கள் எனில் எவரிடமும் கையேந்தாமல் இருப்பார்கள் எனில் அல்லாஹ் மறைவான இடத்திலிருந்து அவருக்கு ஆயத்தம் செய்து தருகிறான்.

இவ்வாறு தான் அல்லாஹ் முபல்லிக்குகள் மட்டுமல்ல; ஒவ்வொரு வக்ஃபே ஸிந்தகியுடனும் நடந்து கொள்கிறான். அல்லாஹ்வின் அருளால் செயற்களத்தில் நாம் இன்னும் இத்தகைய காட்சிகளைக் காண்கிறோம்.

பிறகு மவ்லானா குலாம் அஹ்மத் பாரூக் சாஹிப் பற்றி அவரது ஒரு மகன் எழுதியுள்ளார்.

இந்த முபல்லிக் ஜமாஅத் வேலையாக நீண்ட காலமாக வெளியில் இருந்தார். திரும்பி வந்ததும் ஹைதராபாத்தில் அமர்த்தப்பட்டார். ஜமாஅத் தரப்பிலிருந்து அவருக்கு ஒரு சிறிய இடம் கிடைத்தது. தந்தையார் இங்கு வந்ததில் மகிழ்ச்சி இருந்தது. ஏனெனில் நீண்ட காலம் வெளியில் இருந்தார். இனி நமது தந்தை நம்முடன் இருப்பார். ஆனால் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைப் பார்த்து அவரது இளைய மகன் அப்போது அவருக்கு இருந்த அறிவிற்கேற்ப குலாம் அஹ்மத் பாரூக் சாஹிபிடம் கூறினார். அப்பா, இந்த இடத்தை சீர்படுத்தித் தருமாறு ஜமாஅத்திடம் கேளுங்கள் என்றார். ஹஸ்ரத் மவ்லான பாரூக் சாஹிப் தமது வக்ஃபை நடைமுறைப்படுத்தத் தெரிந்தவர். எனவே மகன் கூறிய விஷயங்கள் மீது அவருக்கு எந்த நோக்கமும் இல்லை. எனவே மிகவும் அன்புடன் தமது குழந்தைகளை அருகில் அமர்த்தினார். மிகவும் ஞானத்துடன் வாழ்வை அர்ப்பணிப்பவரிடம் இருக்க வேண்டிய எளிமை, பணிவு பற்றி எடுத்துரைத்தார். ஒவ்வொரு ஆசையையும் அடக்குவது, ஒவ்வொரு விருப்பத்தையும் வெளிப்படுத்துவதில் இருந்து விலகியிருப்பது வாழ்வை அர்ப்பணிப்பவருக்குரிய இலட்சியமாகும். ஒவ்வொரு அடியிலும் இறைவனை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்கள்.

இந்த மவ்லானா குலாம் அஹ்மத் பாரூக் சாஹிப் மகன் ஒரு சம்பவத்தை கூறுகிறார்: இராணுவத்திலிருந்து இப்போது ஓய்வு பெற்று விட்டார். அம்மகன் அப்போது பணியில் இருந்தார். பையன்களாகிய நாங்கள் பல இடங்களில் பணியில் இருந்தோம். நாங்கள் வேலை செய்கிறோம். எனவே நீங்கள் பணி ஓய்வு கேளுங்கள் என்று தந்தையிடம் கேட்டோம். அவர் நாளை பதில் கூறுவதாகக் கூறினார். எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. நாளை நமது தந்தை நாம் சொன்னதற்கு இணங்கி விடுவார் என்று கருதினோம். மறுநாள் எங்களை எங்கள் தந்தையார் அருகில் அமர்த்தியவாறு கூறினார். நான் மிகவும் எளிமையான மனிதன். நீங்கள் நேற்று கூறிய வார்த்தை எனது மனதை மிகவும் காயப்படுத்தி விட்டது. அல்லாஹ்வுக்காக நீங்கள் திரும்பவும் இவ்வார்த்தை கூறாமல் இருக்க வேண்டும். நான் எனது வக்ஃபே ஸிந்தகி வாழ்வின் ஒவ்வொரு மூச்சையும் அல்லாஹ்விடம் ஒப்படைப்பதாக சத்தியமிட்டு உறுதி கூறிவிட்டேன். எந்த அளவுக்கு எனில் அல்லாஹ்வே இதே நிலையில் என்னை திரும்ப அழைத்துக் கொள் என்று உறுதி கூறியுள்ளேன். நீங்கள் மீண்டும் ஒருமுறை ஒருபோதும் இவ்வாறு கூற வேண்டாம். இதனால் எனது உடன்படிக்கையை மீறி விடக் கூடாது என்று அஞ்சுகிறேன். இவ்வாறு கூறிவிட்டு எழுந்து நின்றார். அல்லாஹ்விடம் நான் செய்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறியவாறு எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

இவர்களே வாழ்வை அர்ப்பணிப்பதன் ஹக்கை – போதுமென்ற மனத்தின் ஹக்கை நிறைவேற்றியவர்கள் ஆவர்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வாழ்வை அர்ப்பணித்த ஒருவர் பயணத்தின் சிரமங்களை சகித்துக் கொள்ள தெரிந்திருக்க வேண்டும். ஊர் ஊராகச் சுற்றி நமது தோற்றத்தின் நோக்கத்தைக் கூற வேண்டும்.

ஆப்பிரிக்காவில் நமது முபல்லிக்குகள் ஆரம்பத்தில் சென்ற போது பயணத்தின் கடுமையை சகித்து வந்தனர். அதேபோன்ற நிலை தான் இந்தோனேஷியாவிலும் பயணத்திற்கான எந்த வசதியும் இல்லை. பயணத்தை எளிதாக கழிக்கக்கூடிய பயண உணவும் இருந்ததில்லை. பைசா இருந்ததில்லை. இவ்வாறு பயணத்தின் கஷ்டத்தைச் சகித்துக் கொள்வதுடன் எதிர்ப்பையும் சகித்துக் கொள்ள வேண்டியதிருந்தது. இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் இந்நிலை இருந்தது.

மவ்லானா நஸீர் அலி சாஹிபின் பல சம்பவங்கள் உள்ளன. இவரது ஊர்க்காரர்கள் ஊரை விட்டு விரட்டினர். காட்டில் இரவுகளைக் கழித்து வந்தார். கொசுக்களும் அதிகம். இன்று ஆப்பிரிக்காவில் காணப்படுகின்ற வளர்ச்சி இந்த சான்றோர்களின் தியாகத்தின் விளைவேயாகும்.

**மவ்லானா முஹம்மத் ஸித்தீக் சாஹிப் எழுதுகிறார்.**

இவர் ஒருமுறை மவ்லானா நஸீர் அலி சாஹிபுடன் சென்றிருந்தார். இரண்டாம் உலகப் போர் நடந்த போது 1940 –ல் ஒருநாள் மவ்லானா ஸித்தீக் சாஹிபும் மவ்லானா நஸீர் அலி சாஹிப் மற்றும் நான் (முஹம்மத் ஸித்தீக் சாஹிப்) இருவரும் சிராலியோன் பகுதியில் ஒரு ஊருக்கு தப்லீகிற்கு சென்றார்கள். ஒரு நதியின் மறு கரைக்கு செல்ல வேண்டியதிருந்தது. கப்பலில் போக வேண்டும். மவ்லானா நஸீர் அலி சாஹிப் முதலிலேயே அங்கு உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துச் சென்றிருந்தார்கள். அவர் தப்லீக் செய்து கொண்டிருந்த நாட்களில் எதிர்ப்பும் உருவாகியிருந்தது. இது அவ்வூரில் அவர்களது இரண்டாவது பயணமாகும். அங்கிருந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பெருமிதம் அடைபவர்களாகவும் இருந்தனர். நாம் தான் சரியான முஸ்லிம்கள். அரபிகளுடன் நேரடித் தொடர்புள்ளவர்கள் என்றும் (தங்களைக்) கருதி வந்தனர்.

அங்கு நமது மவ்லவிமார்கள் சென்றனர். அங்கு நம்மைப் பற்றி பொய் பிரச்சாரம் செய்து வைத்திருந்தனர். எனவே ஊர் மக்கள் நமது மவ்லவிகள் மீண்டும் வந்தால் ஊரில் தங்க விடக்கூடாது என்று உறுதிபூண்டிருந்தனர். நமது நோக்கம் அஹ்மதிய்யத்தாகிய உண்மை இஸ்லாத்தை எடுத்து வைப்பது, அதன் தத்துவத்தைப் புரிய வைப்பது, கிறித்தவர்களிடம் இஸ்லாத்தை எடுத்து வைப்பது, சில நாட்கள் தங்கி நம்மைப் பற்றி இவர்களிடம் பரவியிருந்த தவறான கொள்கைகளை அகற்றுவது போன்ற தீர்மானங்களை எடுத்தவாறு கப்பலில் ஏறினர். மக்ரிப் நேரத்தில் அக்கிராமத்தை அடைந்தனர். சில நாட்கள் தங்கவும், சொற்பொழிவாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு முபல்லிக்குகள் கப்பலிலிருந்து இறங்கி நேராக Chief பங்களாவுக்கு சென்றனர். Chief ற்கு விருந்தோம்பல் செய்வதற்காக ஒரு grand கிடைத்து வந்தது. நம்மைப் பற்றி தவறாக சொல்லி வைக்கப்பட்டிருந்தது. Chief தமது விளைநிலத்தைப் பார்க்க சென்றவர் திரும்பி வரவில்லை. பொறுப்பில் இருந்த மற்றவர்கள் ஆரவாரமாக தமது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினர். அவர்களுள் சில அனுதாபிகள் இருந்தனர். அவர்களும் மற்றவர்களின் எதிர்ப்பால் ஏமாந்து போய் விட்டனர். நம்முடன் சில ஆப்பிரிக்க மாணவர்கள் மட்டுமே இருந்தனர். ஊரில் நம்மை கேட்பார் ஒருவரும் இல்லை. மாணவர்கள் ஆப்பிரிக்கன் என்பதால் அவர்களுக்கும் ஓரிடம் கிடைத்தது. அவர்கள் அங்கு சென்றார்கள். அவர்களில் இருவர் மட்டும் ஊருக்கு வெளியிலுள்ள காட்டில் சுற்றிக் கொண்டிருந்தனர். நாங்கள் ஒரு லெப்னானி முஸ்லிமிடம் பேசினோம். அவர் நமது பேச்சினால் கவரப்பட்டு நம்மை உடன் அழைத்துச் சென்றார். அங்கிருந்து தப்லீக் ஆரம்பித்தது. அவர் நமக்கு வலுக்கட்டாயமாக உணவு தந்தார். அங்கிருந்து இரவு பத்து மணி அளவில் புறப்பட்ட போது எங்கு செல்லப்போகிறோம் என்று அவரும் கேட்கவில்லை. நாங்களும் சொல்லவில்லை. எங்கு செல்வது என்றும் தெரியவில்லை. நாங்கள் மீண்டும் நதிக்கரையில் உட்கார்ந்தோம். அப்பகுதி விஷப்பாம்புகளும் வனவிலங்குகளும் நிறைந்த பகுதியாகும். கொசுக்களும் அதிகமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் நாங்கள் எல்லா விலங்குகளின் தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருந்தோம். அந்நிலையில் தூக்கம் வரவில்லை. பிறகு ஊரின் பக்கமாக வந்தோம். நள்ளிரவில் மீண்டும் நதிக்கரையில் வந்து அமர்ந்தோம். திருக்குர்ஆனின் வசனங்களை ஒருவர் ஓத மற்றவர் கேட்டுக்கொண்டும் வசனங்களின் விரிவுரை தொடர்பாக பேசிக் கொண்டும் இருந்தோம். சிறிது நேரத்திற்குப் பிறகு மவ்லானா நஸீர் அலி சாஹிப் ஒரு நீண்ட துஆ செய்தார்கள். அல்லாஹ்வே இவ்வூர் மக்களுக்கு நேர்வழி காட்டுவாயாக என்று துஆ கேட்டார்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் எமது தூய நோக்கங்களுக்காக துஆ செய்தார்கள். மீண்டும் நகர்ந்தோம். இரவு மூன்று மணி அளவில் பள்ளிக்குள் சென்று தஹஜ்ஜுத் தொழலாம் என்று சென்றோம். பள்ளிவாயிலுக்குள் நுழைந்தோம். முஸ்லிம்களின் பள்ளிவாயில்களின் நிலை எவ்வாறிருந்தது என்றால் பள்ளிக்குள் நாங்கள் சென்றதும் திடீரென்று பள்ளிவாயிலிருந்து ஆட்டு மந்தை வெளியில் வந்தது. நாங்கள் மஸ்ஜிதை சுத்தம் செய்தோம். பிறகு சுபுஹ் நேரமாகி விட்டது. நாங்கள் பாங்கு சொன்னோம். பாங்கு சப்தம் கேட்டு மக்கள் வந்தனர். முஸ்லிம் அல்லாதவர்களும் கூட வந்தனர்.

முஸ்லிம்களின் பெரிய தலைவர்கள் அங்கு வந்து விட்டனர். காரணம் எவராவது இரவில் இவர்களுக்கு தங்க இடம் தந்து, பிறகு இவர்கள் வந்து நமது மஸ்ஜிதில் நுழைந்து அதனை கைப்பற்றப் போகிறார்களோ என்ற அச்சத்தில் வந்தனர். பிறகு நாங்கள் தொழுவதைப் பார்த்தனர். இவர்களின் (அஹ்மதி) அஸான் வேறு; தொழுகை வேறு என்று அங்கு பிரச்சாரம் செய்யப்பட்டிருந்ததால் நாம் தொழுவதையும் பாங்கையும் கேட்டனர். ஒரே ஒரு வித்தியாசம் மட்டுமே அவர்களுக்கு தெரிந்தது. அஹ்மதிகள் நிற்கும் போது கையை கட்டிக் கொண்டு நிற்கின்றனர். மாலிக் மஸ்ஹபைச் சார்ந்த மக்கள் கையை தொங்கவிட்டவாறு தொழுவர். இந்த ஒரு வித்தியாசம் தவிர வேறு எதையும் அவர்கள் பார்க்கவில்லை. எனினும் அவர்களின் எதிர்ப்பு எதுவும் குறையவில்லை. ஒரு விஷயத்திற்கு நன்றி சொல்ல வேண்டும். பள்ளிவாயிலில் வந்து தொழுவதை தடுக்கவில்லை. தாமும் தொழுது விட்டு திரும்பி விட்டனர். அதன் பிறகு அல்லாஹ் தன் அருளால் இவர்களை அஹ்மதிய்யத்தைக் கொண்டு பாதுகாத்தான். அப்பகுதியில் அஹ்மதிய்யத் வளர்ந்தது. இதுவே மார்க்கத்தைப் புரியும் திறனின் செயல் வெளிப்பாடாகும். இதனை நமது முபல்லிக்குகள் செய்தனர். எனவே மார்க்கத்திற்காக தன்னை அர்ப்பணித்த ஒருவருக்கு முதலில் தமது விருப்பத்தை தியாகம் செய்ய வேண்டியுள்ளது. கஷ்டங்களை சந்திக்க வேண்டியுள்ளது. இன்றும் கூட இந்த முன்மாதிரிகளை காணுகின்றோம்.

புதிதாக சேர்ந்த நமது கொள்கைப்பரப்புநர்கள் கூட வக்ஃபே ஸிந்தகியின் இந்த நிலைமைகளை மனதில் கொண்டு படிக்கும் போதும் களத்திலும் இதுபோன்ற பணி செய்ய வேண்டும். இந்த உணர்வுகளை பெற்றவாறு நீங்கள் களத்தில் இறங்க வேண்டும். என் முன்னாலும் நிறைய மாணவர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். இப்போதே நான் சொன்னதை சிந்தியுங்கள். இதுவன்றி மார்க்கத்தை பரப்ப இயலாது. இதில் இல்லாமல் செயற்களத்தில் வெறும் பதற்றத்தைத் தவிர உங்களிடம் எதுவும் இருக்காது. சிலர் துரதிஷ்டவசமாக Transfer செய்யும் போது வக்ஃபிலிருந்து பின்வாங்கினர். எனவே இப்போதிலிருந்தே உங்களை தயார் செய்யுங்கள். எந்த கஷ்டத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும்.

ஜாமிஆவில் படித்துக் கொண்டிருப்பவர்களிடம் குறிப்பாக நான் கூறுகிறேன். இப்போதே இந்த கஷ்டங்களைக் குறித்து சிந்தியுங்கள். இன்று அதிகமான வக்ஃபே நவ் (வாழ்வை அர்ப்பணித்தவர்கள்) இருக்கின்றனர். எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றனர். பல்வேறு நாடுகளிலுள்ள நமது ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிக்கின்றனர். அவர்கள் முதலில் தமது பெற்றோரின் உறுதிமொழியை பிறகு தமது உறுதிமொழியை, முன்னர் வாழ்ந்த சான்றோர்களின் தியாகத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எதிர்பார்ப்புகளை தம்முன் நிறுத்தட்டும்.

இவற்றை கவனத்திற் கொண்டவாறு அல்லாஹ்வுடன் செய்த வாக்குறுதியை நிறைவேற்ற முயற்சி செய்யட்டும். இந்த பற்று, விசுவாசத்தை வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் முரப்பி, முபல்லிக்களுக்கு என்று கண்ணியம் உள்ளது. ஆனால் அவர்கள் முதலில் எளிமையுடன் நடக்க வேண்டும் என்பது அவசியமாகும். தமது விருப்பத்தை, தேவையை எவரிடமும் வெளிப்படுத்த வேண்டாம். மவ்லவி சாஹிப் போதனை செய்தது போன்று உங்கள் தேவைகளை இறைவன் முன் மட்டுமே எடுத்து வையுங்கள். என்னுடைய அனுபவமும் அதுதான். நான் கானாவில் இருக்கும் போது மிகவும் சிரமமான நிலை இருந்தது. அல்லாஹ் தான் எனது தேவையை நிறைவேற்றித் தந்தான். இறைவனிடமே கேளுங்கள். கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளுங்கள். உங்கள் கண்ணியத்தை ஒருபோதும் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். இவை புதிதாக வந்தவர்களுக்கு மட்டும் நான் கூறவில்லை. பழைய முபல்லிக்குகளும் இதனை கவனத்தில் வைக்கட்டும். சில வேளையில் இதனை மறந்து விடுகின்றனர். சில வேளை உலகியல்வாதிகளைப் பார்த்து உங்கள் விருப்பங்களும் அதிகரித்து விடுகின்றன. ஒவ்வொரு கொள்கைப் பரப்புநரும் ஜமாஅத்தின் பார்வையில், தலைமையகத்தின் பார்வையில் ஜமாஅத் சகோதரர்களின் பார்வையில் காலத்தில் கலீஃபாவின் பிரதிநிதியாவார். எனவே இந்த பிரதிநித்துவத்திற்கு பங்கம் ஏற்படும் எந்த செயலும் உங்களிடம் கூடாது. சில வேளைகளில் மனைவி மக்களின் வற்புறுத்தலால் சில தேவைகளை வெளியில் கேட்டு விடுகின்றனர். ஜமாஅத் தமது வசதிக்கேற்ப வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முயற்சிக்கிறது; செய்யவும் வேண்டும். அதே வேளையில் ஏழை நாடுகளின் பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டால் நாம் எவ்வளவு முயன்றபோதிலும் விலைவாசி உயர்வை எதிர்கொள்ள வேண்டி வருகிறது. ஆனால் வாழ்வை

அர்ப்பணித்த ஒருவர் தனது கஷ்டத்தை எவருக்கு முன்னாலும் எடுத்து வைக்க வேண்டாம். எவ்வளவு அழ வேண்டும் என்றாலும் இறைவனுக்கு முன்னால் அழுங்கள். நான் முந்தைய சான்றோர்களின் தியாகங்களைக் கூறினேன். இன்றும் அல்லாஹ்வின் அருளால் அத்தகைய தியாகங்கள் உள்ளன. ஆனால் சிலர் பொறுமையிழந்து விடுகின்றனர். தமது வக்ஃபை முறித்து விடுகின்றனர். மற்றவர்களைப் பார்த்து தமது விருப்பத்தை வெளிப்படுத்தும்போது இந்நிலை ஏற்படுகிறது. அல்லது வக்ஃபை முறித்து விடுகின்றனர். எனவே தனது போர்வைக்குள்ளேயே இருப்பது ஒரு வக்ஃபே ஸிந்தகியின் பணியாகும். இதனைத் தொடர்ந்து வாழ்வை அர்ப்பணித்தவர்களின் மனைவிமார்களுக்கு கூறுவேன். அவர்களும் தமக்குள் ஒரு தன்னிறைவை உருவாக்க வேண்டும். கணவருடைய வக்ஃபை சோதனையில் ஆழ்த்தக்கூடிய வகையில் கணவரால் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை வைக்காதீர்கள்.

இந்த மகத்தான பணிக்காக முபல்லிக்குகள், முரப்பிகள் தம்மை அர்ப்பணித்துள்ளீர்கள் எனில், அவர்தம் மனைவிமாரும் அவர்களது பணியில் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். ஒரு முபல்லிக் ஒரு முரப்பி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டலை தன்முன் வைக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு மத்ரஸாவை தொடங்கி வைத்துக் கூறினார்கள்.

இந்த மத்ரஸா இஸ்லாத்தினைப் பரப்பவும் ஓர் ஊக்கமாக ஆகட்டும். இதிலிருந்து வாழ்வை அர்ப்பணிக்கும் இளைஞர்கள் வெளிவரட்டும். அவர்கள் உலக வேலைகள் இலக்குகளை விட்டு விட்டு மார்க்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அரபி மற்றும் மார்க்க விஷயத்தில் அவற்றை புரிந்து கொள்வதில் ஒரு பிடிப்பு உருவாகட்டுமாக!

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இக்கூற்றினை புரிவதற்கு வாய்ப்பு தருவானாக!

இன்னும் வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் சம்பந்தமாக ஜமாஅத்தில் அமைப்பு ரீதியான சில விஷயங்களும் உள்ளன. வக்ஃபே நவ்வின் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர் சிறுமியர்களும் பெரும்பாலார் மார்க்க அறிவு பெறுவதற்காக ஜாமிஆவிற்கு வருவதில்லை. பல்வேறு துறை சார்ந்த படிப்புகளை படிக்கின்றனர். ஜமாஅத்திற்கு அந்த துறைகளின் வாகிஃபீன்களும் (அர்ப்பணித்தவர்களும்) தேவைதான். எனினும் ஜமாஅத்தில் பல்வேறு தரப்பட்ட மட்டங்களில் ஆலோசனையும் பெற வேண்டும். நாம் மேற்கொண்டு என்ன படிக்கலாம்? எமது விருப்பம் எந்த துறையைச் சார்ந்துள்ளது? எனவே மேலும் என்ன செய்யலாம் என்று கேட்க வேண்டும்.

இப்போது அல்லாஹ்விள் அருளால் 14500 வக்ஃபே நவ் சிறுவர்கள், சிறுமியர்கள் 15000க்கும் அதிகமாக ஆகி விட்டனர். மொத்த எண்ணிக்கை 40000 பேர். அவர்கள் அனைவரும் தமது படிவத்தை தானே நிரப்ப வேண்டும். தமது வக்ஃபில் இருக்க விரும்புகிறார்களா இல்லையா என்று தெரிவிக்க வேண்டும். இது அவர்களே சுயமாக முடிவெடுக்க வேண்டிய வயதாகும். யோசித்து முடிவு செய்யுங்கள். வக்ஃபை தொடரப் போகிறீர்களா இல்லையா? என்று முடிவெடுங்கள். முதலில் பெற்றோர்கள் உங்களை அர்ப்பணித்தனர். இப்போது வக்ஃபே நவ் சிறுவர் சிறுமியர் தாமே சுயமாக தெரிவிக்க வேண்டும். வக்ஃபில் நிலைநிற்கப் போகிறீர்கள் எனில் ஜமாஅத்திற்கு அதனை தெரிவிக்க வேண்டும். ஜமாஅத்திடமிருந்து வழிகாட்டல் பெறுங்கள். நாங்கள் ஜமாமிஆவில் படிக்கப் போவதில்லை. இந்த துறையில் எமக்கு ஆர்வம் உள்ளது. எந்த துறையில் படிக்க வேண்டும் என்று எங்களுக்கு வழிகாட்டுங்கள் என்று கூறுங்கள். நான் கூறியது போன்று கண்டிப்பாக உங்கள் ஆர்வத்தை தெரிவியுங்கள். ஆனால் ஜமாஅத்திற்கு தெரிவிப்பது அவசியமாகும். பிறகு பல்வேறு காலங்களில் ஜமாஅத்திடமிருந்து வழிகாட்டல் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும். நான் ஏற்கனவே கூறியது போன்று செயலர்களும் நல்ல செயல்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் செயல்திறனுடன் இருக்கும் போது சம்பந்தப்பட்டவர்களிடம் தகவலைப் பெற்று தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும். பிறகு தலைமையகம் எதனை செய்யலாம். எதனைச் செய்ய வேண்டாம் என்று கூறும். படிப்பு முடிந்தவுடன் எந்த துறையில் உங்கள் சேவையை எடுத்து வைக்க வேண்டும் என்று தானே தீர்மானிப்பது வக்ஃபே நவ் சிறுவர்களின் பணி அன்று. அவர்களது பெற்றோரின் பணியும் அன்று. நீங்கள் தான்

முடிவெடுப்பீர்கள் என்றால் அதனையும் தெரிவித்து விடுங்கள். வக்ஃபே நவ் பட்டியலில் இருந்து எங்களை விடுவித்து விடுங்கள் என்று கூறி விடுங்கள். இப்போது நீங்கள் 15 வயதுடைய படிவத்தை நிரப்பி தந்து விட்டால் திரும்பிப் போவதற்கு எந்த வழியும் இல்லை. நான் புதிதாக ஒரு வழி கூறுகிறேன். படிப்பு முடித்து விட்டு மீண்டும் எழுதுங்கள். வக்ஃபே நவ் செயலர்களின் பணிகளுள் ஒன்று அவர்கள் இதனை படிப்பு முடித்த பிறக எழுதி வாங்கி அனுப்ப வேண்டும். தலைமையகத்திற்கு முறைப்படி எழுத வேண்டும். நாங்கள் படித்து முடித்து விட்டோம். இப்போது நாங்கள் ஜமாஅத்திற்கு எங்கள் பணியைக் கொடுக்க விரும்புகிறோம். அல்லது விரும்பவில்லை என்பதை தெரிவித்து விட வேண்டும். 15 வயதிற்கு மேல் உள்ளவர்களின் எண்ணிக்கையில் 10% பேர் ஏறத்தாழ 1426 பேர் ஜாமிஆவில் படிக்கின்றனர். 90% பேர் மற்ற படிப்புகளைப் படிக்கின்றனர். கல்லூரிகள், யுனிவர்சிட்டிகளில் படிக்கின்றனர். அல்லது சிலர் படிப்பை விட்டு விட்டனர். சிலர் தொழில்கல்வி படிக்கின்றனர். இதனைப் பற்றியும் முறைப்படி ரிக்கார்டு தயாராக இருக்க வேண்டும். இந்த 90% பேர் உடைய ரிப்போர்ட் தலைமையகத்திற்கு முறைப்படி அனுப்பப்பட்டிருப்பதாக நான் கருதவில்லை. இந்த வக்ஃபே நவ் சிறுவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்ற தகவல் வேண்டும். வக்ஃபே நவ் செயலர்களிடம் கூறுகிறேன். இது சம்பந்தமான தகவல்களை தலைமையகத்திற்கு அனுப்புங்கள். அதுபோன்று வக்ஃபே நவ் மாணவர்கள் ஜாமிஆவில் படித்தாலும் உலகக் கல்வி கற்றாலும் சரி மார்க்கக் கல்வியைக் கண்டிப்பாக கற்க வேண்டும். வக்ஃபே நவ் குழந்தைகளுக்கு என்று பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. முதலில் 15 வயது வரையுள்ள சிறுவர்களுக்காக மட்டும் பாடத்திட்டம் இருந்தது. இப்போது 19 வயது வரை தயாரிக்கப்பட்டுள்ளது. அதனைப் படித்து அவர்கள் தேர்வும் எழுத வேண்டும். 19 வயது வரையுள்ள பாடத்திட்டத்தை 20 வயது வரை அதிகரிக்கலாம். அதில் சேர வேண்டும். வக்ஃபே நவ் செயலர்கள் 100% வக்ஃபே நவ் குழந்தைகளை இந்த பாடத்திட்டத்தில் இணைத்து கற்பிக்க முயற்சிக்க வேண்டும். பிறகு அதன் விளைவை தலைமையகத்திற்கு அனுப்பவும் வேண்டும். பல்வேறு நேரங்களில் தலைமையக வக்ஃபே நவ் பிரிவில் இருந்து பல்வேறு வழிகாட்டல்கள் அனுப்பப்படுகின்றன. அதற்கு பெரும்பாலான ஜமாஅத்துகள் பதிலே தருவதில்லை. அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக நான் முன்னரும் கூறியுள்ளேன். நான் திரும்பவும் உங்கள் முன் எடுத்து வைக்கிறேன்.

உதாரணமாக, ஒரு வழிகாட்டல்: வக்ஃபே நவ்வில் இணைவதற்கு முக்கியமான நிபந்தனை, பெற்றோர் பிறப்பதற்கு முன்பே எழுத்துப்பூர்வமாக காலத்தின் கலீபாவிடம் விண்ணப்பிக்க வேண்டும். சிலர் குழந்தை பிறந்த பிறகு நாங்கள் மறந்து விட்டோம் என்று எழுதுகின்றனர். ஆனால் முதலில் பிறப்பதற்கு முன்னரே எழுதுபவர்களின் விண்ணப்பம் மட்டுமே ஏற்படுகிறது. இதுவே வக்ஃபே நவ் பிரிவின் நிபந்தனையாக முதலிலிருந்தே இருக்கிறது. இங்கு இன்னொரு விஷயத்தையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வக்ஃபே நவ் திட்டத்தில் சேர்ப்பதற்கு கடிதம் எழுதும்போது அதில் மற்ற சில பிரச்சனைகளையும் எழுதி விடுகின்றனர். ஆனால் உங்கள் கடிதத்திற்கு பதில் அளிப்பதற்கு இங்கு பல பிரிவுகள் உள்ளன. வக்ஃபே நவ் விண்ணபத்திற்கு வக்ஃபே நவ் பிரிவும் மற்ற பிரச்சனைகளுக்கு மற்ற பிரிவும் பதிலளிக்கும். எனவே ஆண்கள், பெண்கள் தங்களது குழந்தைகளை வக்ஃப் செய்வதற்காக கடிதம் எழுதும் போது தனி கடிதமாக எழுதுங்கள். உங்கள் மற்ற பிரச்சனைகளை வேறு தனிக்கடிதத்தில் எழுதுங்கள்.

மேலும் வக்ஃபே நவ்வில் இணைப்பதற்கு அவர்களது பெற்றோர் தான் விண்ணப்பிக்க வேண்டும். மற்ற உறவினர்களின் விண்ணப்பம் ஏற்கப்படாது. நீங்கள் தான் குழந்தைகளை வக்ஃப் செய்ய வேண்டும். துஆ, தர்பிய்யத் எல்லாமும் உங்கள் பொறுப்புதான். மேலும் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வழிகாட்டலின்படி முழுமையாக அமல் செய்யப்படுவதில்லை. முதலில் பிறப்பதற்கு முன் எழுதி தலைமையகத்தின் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமலும், தலைமையகத்திலிருந்து அதற்கான கடிதம் உங்களுக்கு கிடைக்காமலும் இருக்கும் நிலையில் எந்த குழந்தையும் வக்ஃபே நவ் திட்டத்தில் சேர இயலாது. பிறகு பிறரது பொறுப்பில் இருக்கும் குழந்தைகள், உறவினர் பொறுப்பில் இருக்கும் குழந்தைகளைப் பொறுத்தவரை உண்மையான பெற்றோரின் பெயர் மட்டும் தாய் தந்தையரின் பெயர் என்ற இடத்தில் எழுதப்படும். பிறகு குழந்தை பிறந்த பிறகு குழந்தையின் பிறப்பை அறிவித்து தலைமையக பதிவேட்டில் உங்கள் குழந்தையின் பெயரை சேர்ப்பதும் அவசியமாகும். பெற்றோர்கள் நீண்ட காலம் இதனை

செய்யாமலும் தலைமையகத்திலிருந்து நினைவூட்டப்பட்ட பிறகும் பெயரை தலைமையக பதிவேட்டில் பதிவு செய்யாமலும் இருக்கின்றனர். பிறகு பல வருடங்களுக்குப் பிறகு எங்கள் குழந்தையின் ரிக்கார்டு இல்லை என்று முறையிடுகின்றனர். எனவே இந்த பொறுப்பும் பெற்றோருக்குரியதேயாகும். இதே போன்று சிறுவர்கள் 15 வயதை எட்டியதும் வக்ஃபே நவ் செயலர்கள் அந்த சிறுவர்களிடம் அவர்களது வக்ஃபை புதுப்பிக்கச் செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி படிப்பை பல்கலைக்கழகங்களிலோ, கல்லூரியிலோ படித்து முடித்த பிறகும் கூட நான் கூறியது போன்று இன்னொருமுறை புதுப்பிக்க வேண்டும். ஏனெனில் இந்த ரிக்கார்டை Update செய்வது மிகவும் அவசியமாகும். அதனை முறைப்படி பாதுகாப்பதும் அவசியமாகும். அதுவன்றி ஜமாஅத்தின் திட்டங்கள் தேவைகளை மதிப்பிட முடியாது. எந்தெந்த பிரிவுகளில் எத்தனை பேர் தேவை என்று மதிப்பிடுவதற்கும் இந்த ரிக்கார்டு வேண்டும். இன்னொரு விஷயம் பெற்றோருக்கு மிகவும் வருத்தம் தரும் விஷயம்தான். குழந்தைகள் ஊனமுற்றவர்களாக பிறந்தால் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைய இயலாது. அல்லாஹ் அவர்களுக்கு சிறந்த மாற்று அருளை வழங்குவானாக. சில வேளைகளில் பெற்றோர் ஜமாஅத்தின் தண்டனை, நடவடிக்கைக்கு உள்ளாகின்றனர். பெரும்பாலும் ஜமாஅத்தின் பேச்சை ஒப்புக் கொள்ளாமலோ ஜமாஅத்தின் நடைமுறைக்கு மாற்றமாக செயல்பட்டாலோ தண்டனைக்கு உள்ளாகின்றனர். ஜமாஅத் அமைப்பை விட்டு வெளியேற்றும் தண்டனைக்கு ஆளாகின்றனர். இதுபோன்ற நிலையில் அத்தகையோரின் வக்ஃப் செய்யப்பட்ட குழந்தையும் வக்ஃபே நவ் பட்டியலிருந்து அகற்றப்படுகிறது. தம்மை ஒரு தகுதியில் வைக்காத பெற்றோர்கள் ஜமாஅத்திற்கு முழுமையாக கட்டுப்படாதவர்கள், ஜமாஅத்தின் கண்ணியத்தை கவனத்தில் கொள்ளாதவர்கள் தமது குழந்தைகளுக்கு என்ன தர்பிய்யத்தை கொடுப்பார்கள்? எனவே வக்ஃபே நவ் செயலர்கள் இதனையும் குறித்துக் கொள்ளுங்கள். அத்தகைய நிலையில் ஒருவரது குழந்தை வக்ஃப் செய்து அவர் ஜமாஅத்தின் தண்டயின் கீழ் வந்தால் அதனையும் ஜமாஅத்திற்கு உடனே தெரிவியுங்கள். இதெல்லாம் வக்ஃபே நவ் செயலரின் பணியாகும். அதுபோன்று நான் ஏற்கனவே கூறி விட்டேன். வெளியில் கல்வி கற்பதாக இருந்தால் முதலில் கூறிவிடுங்கள். பல்கலைக்கழகத்தில் படித்து முடித்தவர்கள் வக்ஃபில் நிலைத்திருப்பதையும் உறுதியும் செய்து விட்டார்கள் எனில் ஜமாஅத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். நான் இந்த பணி செய்கிறேன் என்று குறிப்பிடுங்கள். ஜமாஅத் இப்போதைக்கு உங்கள் பணியைத் தொடருங்கள் என்று கூறலாம். பெரும்பாலும் அதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. ஜமாஅத் அவரை தனது பணிக்கு அழைத்துக் கொள்ளும். ஆனால் உங்கள் பணி ஒவ்வொரு வருடமும் ஜமாஅத்திற்கு தகவல் தர வேண்டும். அதுபோன்று பெரிய அளவில் படிக்காதவர்கள் பல்வேறு பணிகளுக்கு போய் விடுகிறார்கள். அல்லது டிப்ளமோ படிப்பதற்கான பயிற்சிக்கு சென்று விட்டார்கள் எனில் அதனை முடித்து விட்டு ஜமாஅத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

அல்லாஹ் இந்த எல்லா வக்ஃபே நவ் சிறுவர் சிறுமியர்கள் ஜமாஅத்திற்கு பயனுள்ள அங்கமாக ஆக்குவானாக. நமக்கும் இந்த ஜமாஅத்தில் அமானிதங்களுக்கு அழகிய முறையில் தர்பிய்யத் வழங்க வாய்ப்பை வழங்குவானாக. ஜமாஅத்திற்கு பயனுள்ள அங்கமாக ஆக்க உதவி செய்பவர்களாக நம்மை ஆக்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 22.10.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**